கர்த்தருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள்

Great Are the Works of the Lord

Album 27 Song 5 | ஆல்பம் 27 பாடல் 5

Song 5 கர்த்தருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள்

Psalm 111 – Acrostic psalm praising the Lord for His great works, righteousness, and faithfulness. “The fear of the Lord is the beginning of wisdom.”

கர்த்தருடைய கட்டளைகளெல்லாம்
உண்மையானவைகள்
கர்த்தர் கரத்தின் கிரியைகள்
சத்தியம் நியாயமானவைகள்

மூப்பர்களின் சங்கத்திலே
கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்கள் சபையிலே
கர்த்தரை போற்றுங்கள்

கர்த்தருக்கு பயந்திருத்தலே
ஞானத்தின் ஆரம்பம்
கர்த்தரின் கற்பனைகளின்படி
செய்பவனுக்கு நிற்புத்தியாம்

மூப்பர்களின் சங்கத்திலே
கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்கள் சபையிலே

கர்த்தரை போற்றுங்கள்

கர்த்தர் தமது ஜனத்திற்கு
மீட்பை அனுப்பினார்
தமது உடன்படிக்கையை
நித்தியமாக கொடுத்திட்டார்

மூப்பர்களின் சங்கத்திலே
கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்கள் சபையிலே
கர்த்தரை போற்றுங்கள்

ஜாதிகளின் சுதந்தரத்தை தமது
ஜனத்திற்கு கொடுத்திட்டார்
தமது கிரியைகளின் பெலத்தை
ஜனத்திற்கு தெரியப்படுத்தினார்

மூப்பர்களின் சங்கத்திலே
கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்கள் சபையிலே
கர்த்தரை போற்றுங்கள்

கர்த்தருக்கு பயந்தவர்களுக்கு
ஆகாரம் கொடுத்தார்

தமது உடன்படிக்கையை
என்றென்றும் நினைப்பார்

மூப்பர்களின் சங்கத்திலே
கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்கள் சபையிலே
கர்த்தரை போற்றுங்கள்

கர்த்தர் இரக்கமும்
மன உருக்கமுள்ளவர்
கர்த்தருடைய செயல்
மகிமையும் மகத்துவமுள்ளது

மூப்பர்களின் சங்கத்திலே
கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்கள் சபையிலே
கர்த்தரை போற்றுங்கள்



New
Covenant
This is the
New Testament